# நமது தின கனி
காலை நாளிதழ்

**NAMADHU DHINA KANI** Daily Morning

| Vol: 01 | Issue: 327 | 4 Pages | 29.6.2024 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 327 | 4 பக்கங்கள் | 29.6.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# ஓசூரில் பன்னாட்டு விமான நிலையம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 29

சட்டசபையில், 110 விதியின் கீழ் முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்புகள்:

அனைத்து மாவட்டங்களிலும், தொழில்களைபரவலாகஉருவாக்கி வருகிறோம். மின்னணு மற்றும் மின் வாகனங்கள் உற்பத்தி துறையில், ஓசூர் கடந்த சில ஆண்டுகளில், அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்துள்ளது.

வேகமாக வளர்ந்து வரும் ஓசூர் நகரை, தமிழகத்தின் முக்கியமான பொருளாதார வளர்ச்சி மையமாக உருவாக்க,ஒருபுதியபெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு, அது முடிவடையும் நிலையில் உள்ளது.

ஓசூர் மட்டுமல்லாது, கிருஷ்ணகிரி, தர்மபுரி பகுதிகளின் ஒட்டு மொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில், ஓசூரில் ஒரு விமான நிலையம் அமைப்பது அவசியம் என, அரசு கருதுகிறது.

எனவே, ஓசூரில் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில், ஆண்டுக்கு 30 லட்சம்பயணியரைகையாளக்கூடிய வகையில், ஒரு பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும்.

திருச்சி மாநகரில் உலகத்தரம் வாய்ந்த, மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம், கருணாநிதி பெயரில் அமைக்கப்படும்.

இது, பல்வேறு வசதிகளை உள்ளடக்கி, தமிழகத்தின் நெற்களஞ்சியப் பகுதியில், ஓர் அறிவுக் களஞ்சியமாக அமைந்திடும்.

இவ்வாறு முதல்வர் அறிவித்தார்.

# உள்ளாட்சிகளை தரம் உயர்த்த சட்ட திருத்தம்: அமைச்சர் நேரு

சென்னை, ஜூன். 29

சட்டசபையில், இந்திய கம்யூனிஸ்ட் ராமச்சந்திரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து அமைச்சர் நேரு கூறியதாவது:

மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில், பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார். நாளை சட்டசபையில்சட்டதிருத்தம்கொண்டு வர உள்ளோம்.

ஏற்கனவே உள்ளாட்சிகளை தரம் உயர்த்த, மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்;

வருவாய் எவ்வளவு இருக்க வேண்டும் என, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

புதியசட்டத்திருத்தத்தில்,தேவையான இடத்தில், நகராட்சியாக, மாநகராட்சியாக தரம் உயர்த்த அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட உள்ளது. சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்ட பின், உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்' என்றார்.

# 'ரெட்டியார் சமூகம் குறித்து குறைவாக பேசவில்லை': ராஜகண்ணப்பன் விளக்கம்



சென்னை, ஜூன் 29

சட்டசபையில், கடந்த 25ம் தேதி மாலை, மானிய கோரிக்கை விவாதத்திற்கு அமைச்சர் ராஜகண்ணப்பன் பதில் அளித்த போது, அமைச்சர் நேரு, சபாநாயகர் அப்பாவு குறித்து கூறிய சில கருத்துகள், சபைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டன.

ஆனால், அவரது பேச்சு நேரடியாக ஒளிபரப்பானதால், ரெட்டியார் சமுதாயம் குறித்து தவறாக பேசியதாக தகவல் பரவியது.

இது தொடர்பாக, நேற்று அமைச்சர் ராஜகண்ணப்பன், சட்டசபையில் அளித்த விளக்கம்:

சட்டசபையில் அன்று பேசும் போது, ரெட்டியார் சமூகம் குறித்து பேசியதாக, தவறாக எடுத்துக் கொண்டுள்ளனர். எந்த சமூகம் குறித்தும் குறிப்பாக பேசவில்லை. அவர்கள் தங்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

முதல்வருடன் கலந்து பேசி அறிவிப்பு வெளியிடப்படும்.எந்தசமுதாயம்குறித்தும், குறிப்பாக ரெட்டியார் சமூகம் குறித்து, நான் குறைவாக எதுவும் பேசவில்லை. சமுதாய பிரச்னையில் நாம் போகக்கூடாது என்பதில், அரசு உறுதியாக உள்ளது.

நாம் அனைவரும் ஒன்று என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நான்சமுதாயம் குறித்து பேசியதாக, யாரும் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

சபாநாயகர் அப்பாவு: ஏற்கனவே அமைச்சர் கூறியதை, சபைக்குறிப்பில் இருந்து நீக்கி விட்டேன். அமைச்சர்கள் பதிலுரை நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. அமைச்சர் பேசிய வார்த்தைகள், சமூக வலைதளங்களில் பரவின. அந்த வார்த்தை மனம் புண்படும்படி இருக்கும். யாருடைய மனதையும் புண்படுத்த நினைக்கவில்லை என்று கூறுங்கள்.

அமைச்சர் ராஜகண்ணப்பன்: ஜாதி, பேதமற்ற சமுதாயம் என்பதே நம் கொள்கை. யாருடைய மனதையும் புண்படுத்துவது கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

# படம் பிடித்து காட்டும் அரசின் மெத்தனப்போக்கு: ஓ.பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு



சென்னை, ஜூன் 29

அரசு துறைகளில், 5.50 லட்சம் வேலை வாய்ப்புகள் என, தேர்தல் வாக்குறுதி அளித்து விட்டு, 2026 ஜனவரிக்குள், 75,000 பேருக்கு அரசு வேலை என, முதல்வர் அறிவித்துள்ளார். இதன் வழியாக, தேர்தல் வாக்குறுதி முழுமையாக நிறைவேற்றப்படாதது நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில், 65,483 பணியிடங்கள்மட்டும்நிரப்பப்பட்டுள்ளன. இவற்றில் தேர்வு முகமை வழியே, கருணை அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தப்பட்டோர் விபரத்தை தெரிவிக்க வேண்டும். முறையான சம்பள விகிதத்தில் எத்தனை பேர், தொகுப்பூதியத்தில் எத்தனை பேர் என்பதை தெரிவிக்க வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளில், 3.30 லட்சம் பணியிடங்களை நிரப்பியிருக்க வேண்டிய நிலையில், 65,000 பணியிடங்கள் மட்டும் நிரப்பியது,

அரசின் மெத்தனப் போக்கையும், திறமையின்மையையும் படம் பிடித்து காண்பிக்கிறது. இளைஞர்களுக்கு அரசு வேலை வாய்ப்பை வழங்குவதில்,

தி.மு.க., அரசுக்கு அக்கறை இருக்குமானால், காலியாக உள்ள அரசுப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று ஓ. பனீர்செல்வம் குற்றம்சாட்டியுல்ளார்.

# 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு பணி: அமைச்சர் உதயநிதி அறிவிப்பு



சென்னை, ஜூன் 2

திருவெறும்பூர், மன்னார்குடி, உத்திரமேரூர், உசிலம்பட்டி, மேட்டூர், கீழ்பென்னாத்துார், கலசப்பாக்கம், தாராபுரம், பென்னாகரம், கீழ்வேளூர், சேந்தமங்கலம், தாம்பரம், குறிஞ்சிப்பாடி, சேலம் ஆத்துார்,கும்பகோணம்,மேலுார், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் ஆத்துார், குளச்சல், மொடக்குறிச்சி, பண்ருட்டி, ராமநாதபுரம் ஆகிய சட்டசபை தொகுதிகளில், 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும்

நாட்டில் முதல்முறையாக, சென்னை அருகே மேலக்கோட்டையூரில் பிரத்யேக ஒலிம்பிக் 'பை சைக்கிள் மோட்டார் கிராஸ்' ஓடுபாதை அமைக்கப்படும்

கன்னியாகுமரியில் களரி, அடிமுறை, சிலம்பம், வர்மம் உள்ளிட்ட தமிழர் பாரம்பரிய தற்காப்புக் கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்காக மையம் அமைக்கப்படும்

மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில், ஒலிம்பிக் தரத்திலான நீச்சல் குளம், கரூர் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் நீச்சல் குளம் அமைக்கப்படும்

மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உள்ள உடற்பயிற்சி கூடங்கள், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதிகளுடன் மேம்படுத்தப்படும்

தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதிகளில்தங்கி பயிற்சி பெறும் வீரர்களுக்கு, ஒரு நாள் உணவுப்படி 250 ரூபாயில் இருந்து 350 ரூபாயாகவும், சீருடை மானியம் 4,000 ரூபாயில் இருந்து 6,000 ரூபாயாகவும், உபகரண மானியம் 1,000 ரூபாயில் இருந்து 2,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்

அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்களுக்கு, ஒலிம்பிக் விளையாட்டு மானியம் 20 லட்சத்தில் இருந்து 25 லட்சம் ரூபாயாகவும், ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளுக்கு, 15 லட்சம் ரூபாயில் இருந்து 20 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

புதிய இளைஞர் கொள்கை அறிமுகம் செய்யப்படும்.

சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில், தமிழகம் சார்பில் பங்கேற்று வெற்றி பெற்ற 100 வீரர்களுக்கு 3 சதவீத இடஒதுக்கீடு அடிப்படையில், அரசு பணி வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் அறிவித்தார்.

## மீனவர்கள் விரைவில் விடுவிப்பு: ஜெய்சங்கர் உறுதி...



புதுடில்லி, ஜூன் 29

இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விரைவில் விடுவிக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாக, முதல்வர் ஸ்டாலினுக்கு, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி அளித்துள்ளார்.

தமிழகத்தின் புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்க சென்ற நான்கு மீனவர்களை, இலங்கை கடற்படையினர் கடந்த 18ல் கைது செய்தனர். இவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் மூன்று முறை கடிதம் எழுதினார்.

மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் பதில்:

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விரைவில் விடுவிக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நலனில் மத்திய அரசு என்றும் அக்கறை கொண்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## திரிணமுல் எம்.எல்.ஏ.,க்கள் தர்ணா




கோல்கட்டா , ஜூன் 29

மேற்கு வங்கத்தில் லோக்சபா தேர்தலுடன் இணைந்து, முர்ஷிதாபாத் மாவட்டத்தில் காலியாக இருந்த பாராநகர் மற்றும் பகவன்கோலா சட்டசபை தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடந்தது.

இதில், திரிணமுல் காங்கிரசைச் சேர்ந்த சயந்திகா பந்தோபாத்யாய் மற்றும் ரயத் ஹுசைன் சர்கார் ஆகியோர் வெற்றி பெற்றனர். இருவரையும் கவர்னர் மாளிகைக்கு வந்து பதவிப் பிரமாணம் செய்துகொள்ள, கவர்னர் மாளிகை தரப்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் திரிணமுல் காங்கிரஸ் தரப்போ, இடைத்தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்க சபாநாயகர் அல்லது துணை சபாநாயகருக்கு கவர்னர் ஒப்புதல் அளிப்பதுதான் மரபு எனக் கூறியது..

இதையடுத்து, சட்டசபைக்கு வந்த இரண்டு எம்.எல்.ஏ.,க்களும் கடந்த இரு தினங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே டில்லி சென்றுள்ளகவர்னர்சி.வி. ஆனந்தபோஸ் இதுகுறித்து கூறுகையில், ''பதவிப் பிரமாணம் செய்து வைக்கும் பணியை யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க அரசியலமைப்பு எனக்கு அதிகாரம்வழங்கியுள்ளது.

''சட்டசபையை இதற்கான இடமாக நிர்ணயிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

''ஆனால், இது தொடர்பாக சபாநாயகர் எழுதிய கடிதம் கவர்னர் மாளிகையின் கண்ணியத்தை குறைக்கும் வகையில் உள்ளதால், அங்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பது சாத்தியமில்லை,'' எனக் கூறினார்.

## போக்சோ வழக்கில் எடியூரப்பா மீது குற்றப்பத்திரிகை தாக்கல்



பெங்களூரு, ஜூன். 29

போக்சோ வழக்கில் முன்னாள் பா.ஜ., முதல்வர் எடியூரப்பா மீது சி.ஐ.டி.போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

கர்நாடகாவில் நான்கு முறை முதல்வராக இருந்தவர் பா.ஜ.,வின் எடியூரப்பா, 81. கடந்த பிப்ரவரி 2ம் தேதி, மமதா, 55, என்ற பெண், தன் 17 வயது மகளுடன், உதவி கேட்டு, அவரது டாலர்ஸ் காலனி வீட்டுக்கு சென்றுள்ளார்.

அப்போது தன் மகளை அறைக்குள் அழைத்து சென்று, பாலியல் ரீதியாக சீண்டியதாக, அப்பெண் சதாசிவ நகர் போலீசில், மார்ச் 14ம் தேதி புகார் அளித்தார். 17 வயது சிறுமி என்பதால், 'போக்சோ' சட்டத்தின் கீழ், எடியூரப்பா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கை சி.ஐ.டி., போலீசார் விசாரித்து வருகின்றனர். கோர்ட் உத்தரவுப்படி பெங்களூரு அரண்மனை சாலையில் உள்ள சி.ஐ.டி., அலுவலகத்தில் ஆஜரானார். தன் மீதான போக்சோ வழக்கை ரத்து செய்யும்படி, உயர் நீதிமன்றத்தில் எடியூரப்பா தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் இந்த வழக்கில் எடியூரப்பா மீது சி.ஐ.டி. போலீசார் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தனர்.

# திருமணம் முடிந்த சிறிது நேரத்தில் கைது செய்யப்பட்ட போலீஸ்காரர்: காரணம் அறிந்த மணப்பெண் அதிர்ச்சி



நாகர்கோவில், ஜூன் 29

குமரி மாவட்டம் கிராத்தூர் பகுதியை சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்க பெண் எம் காம் சி ஏ முடித்துவிட்டு மார்த்தாண்டத்தில் உள்ள ஒரு தனியார் ஆடிட்டிங் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். இதற்காக தினமும் வீட்டில் இருந்து பஸ்சில் சென்று வருவது வழக்கம். அப்போது மார்த்தாண்டம் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸ்காரரான நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் பகுதியை சேர்ந்த ராஜேஷ் (26) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு காதலாக மாறியது. இவர்களது காதல் பெண்ணின் பெற்றோருக்கு தெரியவந்தது.

இதையடுத்து பெண்ணின் பெற்றோர் மகளுக்கும், ராஜேசுக்கும் திருமணம் செய்து வைக்க முடிவு செய்து ராஜேஷிடம் விசாரித்தனர். அப்போது தான் சென்னையை சேர்ந்தவர் என்றும், தன்னுடைய தாய், தந்தை இருவரும் சிறுவயதிலேயே தன்னை பாட்டியிடம் ஒப்படைத்து விட்டனர். இதனால் தனக்கு உறவினர்கள் என்று யாரும் இல்லை என்று கூறி உள்ளார். இதை உண்மை என நம்பிய பெண்ணின் பெற்றோர் இருவருக்கும் வீட்டின் அருகே உள்ள ஒரு கிறிஸ்தவ ஆலயத்தில் வைத்து நேற்று திருமணத்தை நடத்தினர்.

இதற்காக நேற்று முந்தினமே குமரி மாவட்டத்திற்கு வந்த ராஜேஷ் மார்த்தாண்டம் பகுதியில் ஒரு தங்கும் விடுதியில் தங்கியுள்ளார். தாலிகட்டும் நேரத்திற்கு ஒரு காரில் மார்த்தாண்டம் பகுதியை சேர்ந்த 5 ஆண் நண்பர்களுடன் சென்றுள்ளார். மாப்பிள்ளை வீட்டார் சார்பில் இவர்கள் மட்டும் தான் உறவினர்கள். திருமணம் முடிந்ததும் மணமக்கள் இருவரும் மணமகள் வீட்டிற்கு சென்றனர்.

அப்போது ராஜேசுடன் பணிபுரிந்த அப்பகுதியை சேர்ந்த பெண் போலீஸ் ஒருவர் அவரை பார்த்து நீங்கள் களியக்காவிளை சோதனை சாவடியில் பணியில் இருந்தவர் தானே, உங்களுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது என்று கூறினீர்களே என்று கேட்டுள்ளார். அதன் பின்னர் தான் அவர் முதல் திருமணத்தை மறைத்து 2வது திருமணம் செய்தது தெரியவந்தது.

இதனை கேட்டு மணப்பெண் அதிர்ச்சி அடைந்தார். மேலும் நித்திரவிளை போலீஸ் நிலையத்துக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனே அங்கு வந்த நித்திரவிளை போலீசார் ராஜேஷை பிடித்து போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்ல முயன்றனர். இதற்கிடையே ஆவேசத்தில் இருந்த மணப்பெண்ணின் உறவினர்கள் ராஜேஷை சரமாரியாக தாக்கினர்.

எனினும் போலீசார் அவரை மணப்பெண்ணின் உறவினர்களிடம் இருந்து மீட்டு போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இதுகுறித்து பாதிக்கப்பட்ட மணப்பெண் புகார் அளித்தார். அதன்பேரில் ராஜேஷ் மீது வழக்குப்பதிந்து கைது செய்தனர். திருமணம் முடிந்த சிறிது நேரத்தில் போலீஸ்காரர் கைது செய்யப்பட்ட சம்பவம் குமரியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# மரத்தின் இடுக்கில் தலை சிக்கி தவித்த கரடி



அருவங்காடு, ஜூன் 29

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகவே வனவிலங்குகளின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. இதனால் பொது மக்கள் அச்சத்துடன் நடமாடி வருகின்றனர். இரவு நேரத்தில் மட்டும் ஊருக்குள் உலா வந்த வனவிலங்குகள் தற்போது பகல் நேரத்திலும் உலா வரத் தொடங்கி உள்ளன.

இதனால் தேயிலை தோட்ட தொழிலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் அனைவரும் அச்சத்தில் உள்ளனர்.

குன்னூர் அருகே உள்ள பழத்தோட்டம் பகுதியில் கடந்த சில நாட்களாகவே கரடிகள் சுற்றி வருகின்றன. இந்த பகுதியின் அருகே தேயிலை தோட்டம் உள்ளது. சம்பவத்தன்று அந்த தோட்டத்திற்குள் கரடி ஒன்று புகுந்தது.

மக்கள் நடமாட்டம் இருப்பதை அறிந்து கொண்ட கரடி அங்கு மிங்கும் ஓடியது.

பின்னர் அங்குள்ள மரத்தின் அருகே சென்று மரத்தை சுற்றியது. மரத்தில் உள்ள கிளைகளை இழுத்தும், தலையை மரத்தின் இடுக்கில் கொடுத்தும் விளையாடி கொண்டிருந்தது.

அப்போது எதிர்பாராத விதமாக மரத்தின் இடுக்கில் கரடியின் தலை சிக்கிக்கொண்டது. இதனால் கரடி அலறியது. சத்தம் கேட்டு தொழிலாளர்கள் அங்கு சென்று பார்த்தனர். கரடியின் தலை மரத்தின் இடுக்கில் சிக்கியிருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

கரடி தலையை மீட்பதற்காக போராடியது. அரைமணிநேர போராட்டத்திற்கு பிறகு மரத்தின் இடுக்கில் சிக்கிய தலையை மீட்டது. பின்னர் அங்கிருந்து வனத்திற்குள் ஓடிவிட்டது. தகவல் அறிந்த வனத்துறையினர், சம்பவ இடத்திற்கு வந்தனர். தொடர்ந்து அந்த பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பழத்தோட்ட பகுதியில் தொடர்ந்து கரடிகள் நடமாடி வருவதால் அதனை கூண்டு வைத்து பிடிக்க வேண்டும் என பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கமிஷனுக்காக தில்லுமுல்லு செய்தேன்: மோசடி வழக்கில் கைதான பெண் வாக்குமூலம்



சென்னை, ஜூன் 29

'கமிஷன் தொகைக்காக, தில்லுமுல்லு செய்து கோடிக்கணக்கான ரூபாய் வரை சுருட்டினேன்' என, நிதி நிறுவன மோசடி வழக்கில் கைதான பெண் வாக்குமூலம் அளித்துள்ளார்.

சென்னைமுகப்பேரில், ஆல்வின், 32, அவரது சகோதரர் ராபின், 28, ஆகியோர் ஏ.ஆர்.டி., ஜுவல்லர்ஸ் மற்றும் நிதி நிறுவனங்களை நடத்தி வந்தனர். அவர்கள் முதலீட்டாளர்களுக்கு அதிக வட்டி தருவதாக, 100 கோடி ரூபாய் வரை மோசடி செய்துள்ளனர்.

இதுகுறித்து பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் விசாரித்து, ஆல்வின், ராபின் உட்பட, 11 பேரை கைது செய்துள்ளனர்.

அவர்களில், சென்னை அமைந்தகரையைசேர்ந்த ஆசிக் ஆலுயுதீன், 32, புழல் பகுதியை சேர்ந்த லீமா ரோஸி, 30, ஆகியோரை போலீசார் இரண்டு நாள் காவலில் விசாரித்தனர். அப்போது, போலீசாரிடம் லீமா ரோஸி அளித்துள்ள வாக்குமூலம்:

நான் பிளஸ் 2 வரை படித்துள்ளேன். என் கணவர் ரமேஷ், 2003ம் ஆண்டு இறந்து விட்டார். எங்களுக்கு, 10 மற்றும் நான்காம் வகுப்பு படிக்கும் இரு மகள்கள் உள்ளனர். கணவர் இறந்தபின், மகள்களுடன் சென்னைக்கு இடம் பெயர்ந்தேன்.

அங்கு செயல்பட்ட, வின் ஸ்டார் என்ற நிதி நிறுவனத்தில் வேலை பார்த்தேன். உடன், வண்ணாரப்பேட்டையை சேர்ந்த ராபின், 28, பணியாற்றினார். அவருக்கு திருமணமாகவில்லை. எங்களுக்குள் நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

சகோதரர் ஆல்வினுடன் சேர்ந்து ராபின், முகப்பேரில் ஏ.ஆர்.டி., ஜுவல்லர்ஸ் மற்றும் நிதி நிறுவனம் துவங்கினார். நான் அந்த நிறுவனத்தில் முதலீட்டாளர் போல செயல்பட்டேன். ஒரு லட்சம் ரூபாய் முதலீடு செய்தால், தினமும், 1,500 ரூபாய் வீதம், 200 நாட்களுக்கு தருவர்.

பின், 50,000 ரூபாய் முதலீடு செய்தால், தினமும், 3,500 ரூபாய் தரப்படும். அதன்பின், 1 லட்சம் ரூபாய் முதலீடு செய்தால், 9,000 ரூபாய் தரப்படும் என விதவிதமான திட்டங்களை அறிவித்தனர். முதலீட்டாளர்களை சேர்த்து விடும் நபர்களுக்கும் கமிஷன் தொகை கிடைக்கும்.

அவ்வாறு முதலீட்டாளர்களை சேர்த்து விட்டு கமிஷன் தொகைபெற்றுவந்தேன். நானும், எனக்கு தெரிந்த நபர்களும், 60 நாட்களுக்கு முதலீட்டாளர்களை சேர்க்க தவறினால், கமிஷன் தொகை நின்று விடும். அதற்காக, தில்லுமுல்லு செய்து முதலீட்டாளர்களை சேர்த்து விட்டேன். என் பெயரில் முதலீடு செய்தால், கமிஷன் தொகை அதிகம் கிடைக்கும் என்று கூறியும், அவர்களை நம்ப வைத்து கோடிக்கணக்கில் சுருட்டினேன்.

நான் ராபினின் நெருங்கிய தோழி என்பதால், மார்க்கெட்டிங் மேலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. எனக்காக, வடபழனியில், ஏ.ஆர்.டி., கோல்டு லோன் என்ற நிறுவனத்தையும் துவக்கி ஒப்படைத்தார்.

அங்கு பணிபுரிய ஆட்களை நியமித்து விட்டு, ராபின் இருக்கும் இடத்திலேயே நானும் பணிபுரிந்து, முதலீட்டாளர்களைநம்ப வைத்து மோசடிக்கு உடந்தையாக இருந்தேன்.

இவ்வாறு அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

# போலீஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட கள்ளச்சாராய வியாபாரி தப்பியோட்டம்





கள்ளக்குறிச்சி, ஜுன் 29

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரம் பகுதியில் கடந்த 18ந் தேதி மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்து இதுவரை 64பேர்உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையே கள்ளச்சாராயத்தை தடுக்கும் பொருட்டு கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் சரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கள்ளச்சாராயம் வியபாரம் செய்வோர் மற்றும் அதனை கடத்துபவர்களை உடனடியாககைது செய்ய வேண்டும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ரஜித் சதுர்வேதி அதிரடி உத்தரவுபிறப்பித்துள்ளார்.

இதனை தொடர்ந்து போலீசார்இதுவரைசுமார் 86 பேரை கைது செய்துள்ளனர். இந்த நிலையில் சங்கராபுரம் அருகே உள்ள சேஷசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த பிரபல கள்ளச்சாராய வியாபாரி மணிகண்டன் (வயது42) என்பவரை சங்கராபுரம் போலீசார் கள்ளச்சாராய வழக்கில் அழைத்து வந்து போலீஸ் நிலையத்தில் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் கள்ளச்சாராய வியாபாரி மணிகண்டன் போலீஸ் நிலையத்திலிருந்து திடீரென தப்பி ஓடிவிட்டனர். இது குறித்த தகவல் வெளியானதால் சங்கராபுரம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. போலீசார் தப்பிஓடிய கள்ளச்சாராய வியாபாரி மணிகண்டனை தொடர்ந்து தீவிரமாக தேடி வருகின்றனர்.

இந்நிலையில் ஏற்கனவே சேஷசமுத்திரம் கிராமத்தில் மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்து 40க்கும் மேற்பட்டோர் கள்ளக்குறிச்சி, சேலம், விழுப்புரம், புதுச்சேரி உள்ளிட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அக்கிராமத்தில் மட்டும் 4 பேர் இதுவரை உயிரிழந்தனர்.

இதனிடையே சி.பி. சி.ஐ.டி. போலீசாரால் ஏற்கனவே கைது செய்யப்பட்ட சின்னதுரை, செந்தில், ராஜா ஆகிய 3 பேரும் சேஷசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசு ஆஸ்பத்திரியில் தவறான சிகிச்சை: 1 வருடத்திற்கும் மேல் கோமாவில் இருக்கும் பெண்



ஆரணி, ஜூன் 29

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த தெள்ளூர் கிராமத்தை சேர்ந்த சின்னராஜ்குமாரி தம்பதியரின் மகள் ஜெயந்தி. இவருக்கும் ராம்பிரகாஷ் என்பவருக்கும் திருமணம் நடந்தது. இந்த நிலையில் நிறைமாத கர்ப்பிணியான ஜெயந்தியை பிரசவத்துக்காக ஆரணி அரசு ஆஸ்பத்திரியில் கடந்த ஆண்டு மே மாதம் 25ம் தேதி சேர்த்தனர். அங்கு ஜெயந்தியை டாக்டர்கள் பரிசோதித்து வயிற்றில் குழந்தை அசைவற்று இருப்பதாக கூறினர்.

ஆனால் வயிற்றில் அசைவு தெரிவதாக உறவினர்கள் கூறியதன்பேரில் டாக்டா்கள் அறுவை சிகிச்சை செய்தனர். இதில் அவருக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. பின்னர் ஜெயந்திக்கு உடல்நலம் மோசமான நிலை ஏற்பட்டதால் அவரை உடனடியாக மேல்சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு ஆஸ்பத்திரிக்கு டாக்டர்கள் ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர். அங்கு ஜெயந்தியை பரிசோதித்த டாக்டர்கள் ஆரணி அரசு ஆஸ்பத்திரியில் தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதால் கோமா நிலைக்கு சென்று விட்டதாக கூறினர். அங்கு 2 மாத மருத்துவ சிகிச்சைக்கு பிறகு ஜெயந்தி சென்னை ராஜீவ் காந்தி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இங்கு அவர் தொடர்ந்து சிகிச்சையில் இருந்து வருகிறார். 13 மாதம் ஆகியும் கோமா நிலையிலேயே அவர் உள்ளதால் ஜெயந்தியின் உறவினர்கள், பெற்றோர்கள் சுகாதாரத்துறைக்கு தொடர்ந்து புகார் மனு அனுப்பி உள்ளனர்.

இதையடுத்து வேலூர் மாவட்ட சுகாதாரத்துறை இணை இயக்குனர் பாலச்சந்தர் ஆரணி அரசு ஆஸ்பத்திரிக்கு சென்றார். ஆரணி அரசு ஆஸ்பத்திரி மருத்துவ அலுவலர் பாலகிருஷ்ணன் முன்னிலையில் மருத்துவ குழுவினர் சம்பவத்தன்று இருந்த டாக்டர்கள், நர்சுகள் மயக்கவியல் டாக்டர் உள்ளிட்டவர்களிடம் தனித்தனியே விசாரணை நடத்தினார்.

இது தொடர்பான அறிக்கை சென்னை சுகாதாரத்துறைக்கு தெரிவித்து பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என இணை இயக்குனர் கூறினார்.

இது குறித்து தகவல் அறிந்தவுடன் ஜெயந்தியின் பெற்றோர்கள், உறவினர்கள் ஆரணி அரசு ஆஸ்பத்திரி முன்பு திரண்டனர். இதனால் பரபரபரப்பு ஏற்பட்டது. பாதுகாப்புக்காக போலீசார் வரவழைக்கப்பட்டனர்.

# பாபநாசம் அணை நீர்மட்டம் 100 அடியை எட்டியது



நெல்லை, ஜூன் 29

நெல்லை, தென்காசி மாவட்டங்களில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதி மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்துவரும்மழை காரணமாக அணைகள் மற்றும் அருவிகளுக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

நேற்றும் மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. தொடர் மழை காரணமாக 143 அடி உயரம் கொண்ட பிரதான அணையான பாபநாசத்தின்நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கடந்த 3 நாட்களுக்கு முன்பு அணையின் நீர் மட்டம் 86 அடியாக இருந்தது. நேற்று 97.50 அடியாக இருந்த அணை நீர்மட்டம்இன்றுமேலும் 2.5 அடி உயர்ந்து இன்று காலை நிலவரப்படி 99.90 அடியாக இருந்தது. தொடர்ந்து பிற்பகலில் 100 அடியை எட்டியது. கடந்த 3 நாட்களில் 14 அடி உயர்ந்துள்ளது. தொடர் மழை காரணமாக பாபநாசம் அணைக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. நேற்று இரவுமுதல்மழை குறைந்ததால் தண்ணீர் வரத்தும்குறைந்துள்ளது.

இன்று காலை நிலவரப்படிபாபநாசம்அணைக்கு 2,576 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணையில் இருந்து 804.75 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதேபோல் 118 அடி உயரம் கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 78.64 அடியாகவும், 156 அடி உயரம் கொண்ட சேர்வலாறு அணைநீர்மட்டம் நேற்று முன்தினம்7அடிஉயர்ந்து 112 அடியாகவும், இன்று மேலும் 2 அடி உயர்ந்து 114.76 அடியாகவும் உள்ளது.

இன்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியான நாலுமுக்கில் 42 மில்லி மீட்டர், ஊத்து பகுதியில் 33 மில்லி மீட்டரும், காக்காச்சி பகுதிகளில் 24 மில்லி மீட்டரும், மாஞ்சோலையில் 9 மில்லி மீட்டரும் மழைப் பொழிவு பதிவாகி உள்ளது.

தென்காசி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. 85 அடி கொள்ளளவு கொண்ட கடனா நதி நீர்மட்டம் நேற்று 4 அடி உயர்ந்து 57 அடியாக இருந்த நிலையில் இன்று மேலும் 2 அடி உயர்ந்து 59 அடியாக உள்ளது.

84அடிஉயரம்கொண்ட ராமநதி அணை நீர்மட்டம் 75 அடியாகவும், கருப்பாநதி நீர்மட்டம் 37.40 அடியாகவும் உள்ளது. 36 அடி உயரம் கொண்ட குண்டாறு அணை ஏற்கனவே நிரம்பி மறுகால் பாய்ந்து வருகிறது. 132 அடி உயரம் கொண்ட அடவிநயினார் அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் 80 அடியாக இருந்த நிலையில் நேற்று 5 அடி உயர்ந்து 85 அடியாகவும், இன்று மேலும் 5 அடி உயர்ந்து 90 அடியாகவும் உள்ளது.

கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 52.50 அடியாகவும், நேற்று 50.50 அடியை எட்டியநிலையில் இன்று மேலும் ஒரு அடி உயர்ந்துள்ளது. அணை நிரம்ப இன்னும் ஒரு அடியே உள்ளது.

அம்பை வனச்சரகம் மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த தொடர் மழை காரணமாக மாஞ்சோலை பகுதிகளுக்கு சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். இந்த தடை உத்தரவு மறு உத்தரவு வரும் வரை அமலில் இருக்கும்.

# அனைத்து சமுதாயத்தினரையும் திரட்டி போராட்டம் நடத்தப்படும் அன்புமணி அறிவிப்பு

விழுப்புரம், ஜூன் 29

பா.ம.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சி.அன்புமணியை ஆதரித்து தொகுதிக்குட்பட்ட ஆசூர் கிராமத்தில் பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வீதி வீதியாக நடந்தே சென்று பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். பின்னர் அவர், நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அவர் கூறியதாவது:

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் நியாயமாக நடைபெறவேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்த 9 அமைச்சர்கள், அவரை சார்ந்தவர்கள் இங்கேயே தங்கியிருந்து மக்களுக்கு எப்படி பணம் கொடுக்கலாம், எவ்வாறு வாக்குகளை பெறலாம் என திட்டமிட்டுள்ளனர்.

சட்டசபையில் முதலமைச்சரும், அமைச்சர்களும் சாதிவாரி கணக்கெடுப்பு, வன்னியர்களுக்கான இடஒதுக்கீடு சம்பந்தமாக பல பொய்களை பேசியுள்ளனர். இது கண்டிக்கத்தக்கது.

இங்கு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் நீதிமன்றம் தடை செய்ய வாய்ப்பு இருக்கிறது என்றும், மத்திய அரசு, மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் சொல்கிறார். ஒவ்வொரு சமுதாயமும் என்னென்ன நிலைமையில் இருக்கிறது, எந்தளவுக்கு முன்னேறியிருக்கிறது, அவர்களுக்கான இடஒதுக்கீடு பயன்படுகிறதா என்று மாநில அரசு சர்வே எடுத்தால்தான் தெரியும்.

இதைக்கூட நடத்த மாட்டோம் என்று முதலமைச்சர் சொல்வது மோசமான நிர்வாகமாக பார்க்கிறேன். ஆண்டுதோறும் பறவைகளை கணக்கெடுக்கிறீர்கள், தெருவில் சுற்றித்திரியும் நாய்கள் கணக்கெடுக்கப்படுகிறது. ஏன் அரசு பஸ்கள் எவ்வளவு இயக்குவதற்கு தகுதியானது என கணக்கெடுக்கிறீர்கள், மாணவர்களுக்கு நிதி உதவி வழங்க தகுதியான மாணவர்களை கணக்கெடுப்பு செய்கிறீர்கள். ஆனால் தமிழ்நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றத்திற்கு மக்கள் எப்படி இருக்கிறார்கள் என கணக்கெடுப்பு நடத்த தயக்கம் காட்டுகிறார்கள். சமூகநீதிக்காகசாதிவாரி கணக்கெடுப்பு நடத்த தி.மு.க. அரசு தயக்கம், காட்டுவது ஏன்? இந்தியாவில் எந்த மாநிலத்திலும் எந்த கணக்கெடுப்புக்கும் நீதிமன்றம் தடை விதிக்கவில்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 20 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டதற்கு எந்த கணக்கெடுப்பும் நடத்தப்படவில்லை. இஸ்லாமியர்களுக்கும், அருந்ததியர்களுக்கும் இடஒதுக்கீடு கொடுக்கப்பட்டபோது எந்த கணக்கெடுப்பும் நடத்தப்படவில்லை, நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. ஆனால்வன்னியர்களுக்கு மட்டும் கொடுக்க மறுப்பது ஏன்? உங்களுக்கு அதிகாரம் இருந்தும் இல்லை, இல்லை என்று பொய் சொல்கிறீர்கள். இது இடைத்தேர்தல் பிரச்சனை கிடையாது.சமூகநீதிப் பிரச்சனை.

விரைவில் அனைத்து சமுதாயத்தினரையும் திரட்டிபோராட்டம் நடத்துவோம். கருணாநிதி மட்டும் உயிரோடு இருந்திருந்தால் இதற்கு எப்போதோ கையெழுத்து போட்டிருப்பார். ஏனெனில் அவருக்கு சமூகநீதி உணர்வு உண்டு. வன்னியர்களுக்காக இடஒதுக்கீடு பிரச்சனை, சமூகநீதி பிரச்சனைதொடர்பாக நான் தமிழக அமைச்சர்களுடன் விவாதம் நடத்த தயார். சட்டசபையில் சபாநாயகர் யாரையும் பேச விடுவதில்லை. அமைச்சர் பேசக்கூடியதை அவரே பேசி விடுகிறார். ஓசூரில் பன்னாட்டு விமான நிலையம் அமைய இருப்பதை பா.ம.க. வரவேற்கிறது. அப்போதுதான் அப்பகுதி வளர்ச்சி பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

# தாம்பரம் - நாகர்கோவில் வாராந்திர சிறப்பு ரெயில் நீட்டிப்பு



சென்னை, ஜூன் 29

தெற்கு ரெயில்வே சார்பில் பயணிகளின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலை தவிர்க்கவும் பல்வேறு சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், தாம்பரம் நாகர்கோவில், தாம்பரம் கொச்சுவேலி இடையே ஏற்கனவே வாராந்திர சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில், அந்த வாரந்திர சிறப்பு ரெயில் சேவை நீட்டிக்கப்படுவதாக தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது. இதுகுறித்து, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நாகர்கோவிலில் இருந்து ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 4.35 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 4.10 மணிக்கு தாம்பரம் வரும் வாரந்திர சிறப்பு ரெயில் (வண்டி எண்.06012), வரும் ஜூலை மாதம் 7, 14, 21 ஆகிய தேதிகள் வரையும், மறுமார்க்க மாக,தாம்பரத்தில்இருந்து திங்கட்கிழமை தோறும் காலை 7.45 மணிக்கு புறப்பட்டு அதேநாள் இரவு 8.45 மணிக்கு நாகர்கோவில் செல்லும் வாராந்திர சிறப்பு ரெயில் (06011), வரும் ஜூலை மாதம் 8, 15, 22 ஆகிய தேதிகள் வரையும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதேபோல, தாம்பரத்தில் இருந்து வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமை தோறும் இரவு 9.40 மணிக்கு புறப்பட்டு மறுநாள் மதியம் 1.40 மணிக்கு கேரள மாநிலம் கொச்சுவேலி செல்லும் வாராந்திர சிறப்பு ரெயில் (06035), வரும் ஜூலை மாதம் 4, 6, 11, 13, 18, 20 ஆகிய தேதிகள் வரையும், மறுமார்க்கமாக, கொச்சுவேலியில் இருந்து வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை தோறும் மதியம் 1.35 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 7.35 மணிக்கு தாம்பரம் வரும் வாராந்திர சிறப்பு ரெயில் (06036), வரும் ஜூலை மாதம் 5, 7, 12, 14, 19, 21 ஆகிய தேதிகள் வரையும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காதலிக்குமாறு கல்லூரி மாணவிக்கு தொல்லை கொடுத்த வாலிபர் கைது

திருவண்ணாமலை, ஜூன் 29

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே வெம்பாக்கம் தாலுகா சுமங்கலி கிராமத்தை சேர்ந்தவர் கருணாகரன் (24). இவர் 16 வயதுடைய நர்சிங் கல்லூரியில் படித்து வரும் மாணவியை கல்லூரிக்கு சென்று வரும்போது பின்தொடர்ந்து சென்று தன்னை காதலிக்கும்படி கட்டாயப்படுத்தியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து மாணவி தனது பெற்றோரிடம் தெரிவித்தார். அதைத்தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவி செய்யாறு அனைத்து மகளிர்போலீஸ்நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் லதா விசாரணைமேற்கொண்டு போக்சோ சட்டத்தில் கீழ் வழக்குப்பதிவு செய்து கருணாகரனை கைது செய்து சிறையில் அடைத்தார்.

# வீடு புகுந்து பச்சிளம் குழந்தையை கடித்துக்கொன்ற தெரு நாய்... கடலூரில் அதிர்ச்சி சம்பவம்

கடலூர், ஜூன் 29

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அருகே உள்ள கொடிக்களம் கிராமத்தை சேர்ந்தவர் சக்திவேல்(வயது 37). இவருடைய மனைவி நந்தினி(28). இவர்களுக்கு வினித்(6), தர்ஷன்குமார் என்ற 1 மாத கைக் குழந்தையும் உள்ளனர். சக்திவேல் மாலத்தீவில் தங்கி, அங்குள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இதனால் குழந்தைகளுடன் நந்தினி வீட்டில் வசித்து வருகிறார். வினித் வீட்டின் அருகே உள்ள அரசு பள்ளிக்கூடத்தில் 1ம் வகுப்பு படித்து வருகிறான்.

நந்தினி தனது கைக்குழந்தையை வீட்டின் முன் பகுதியில் தூங்க வைத்தார். பின்னர் வீட்டுத் தோட்டத்துக்கு சென்று வேலை செய்து கொண்டிருந்தார். அப்போது திடீரென குழந்தையின் அழுகுரல் சத்தம் அதிகமாக கேட்டது. இதைகேட்டு அதிர்ச்சியடைந்த நந்தினி ஓடி வந்து பார்த்தபோது குழந்தையின் அருகே தெரு நாய் ஒன்று நின்றதாக கூறப்படுகிறது. குழந்தை கழுத்தில் காயத்துடன் பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்தது. இதில் பதறிய நந்தினி அலறி கூச்சலிட்டார். இந்த சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடோடி வந்தனர். உடனே நந்தினி அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தனது குழந்தையை தூக்கிக் கொண்டு பெண்ணாடத்தில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக சென்றார். ஆனால் செல்லும் வழியிலேயே குழந்தை இறந்து விட்டது. தகவல் அறிந்த ஆவினங்குடி போலீசார் நந்தினி வீட்டுக்கு விரைந்து வந்து நாய் கடித்து இறந்ததாக கூறப்பட்ட குழந்தையின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து போலீசார்கூறுகையில், இறந்துபோன குழந்தையின் கழுத்தை கயிற்றால் இறுக்கியது போல் காயம் இருந்தது. மேலும் நாய் கடித்து குதறியதற்கான எந்த தடயங்களும் உடலில் இல்லாததால் குழந்தையின் சாவில் சந்தேகம் உள்ளது. எனவே குழந்தையின்உடல்பிரேத பரிசோதனை அறிக்கை வந்தால் தான் நாய் கடித்து இறந்ததா? அல்லது குழந்தை கொலை செய்யப்பட்டதா? என்பது தெரியவரும் என்றனர்.

# கனியாமூர் கலவரம்: மாணவியின் தாயாரிடம் விசாரிக்காதது ஏன்..? ஐகோர்ட்டு சரமாரி கேள்வி



சென்னை, ஜூன் 29

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் தாலுகாவில் உள்ள கனியாமூர்தனியார்பள்ளியில் பயின்று வந்த பிளஸ் 2 மாணவி 2022ம் ஆண்டு மரணமடைந்தார். இவர், பள்ளியின் மூன்றாவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. தமிழ்நாட்டையே உலுக்கிய அந்த சம்பவத்தை தொடர்ந்து அந்தப் பள்ளி சூறையாடப்பட்டு கலவரம் மூண்டது. இந்த கலவரம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது.

இந்நிலையில் கனியாமூர் கலவரம் தொடர்பாக மாணவியின் தாயாரிடம் விசாரிக்காதது ஏன்..? என காவல்துறைக்கு சென்னை ஐகோர்ட்டு கேள்வி எழுப்பி உள்ளது.

முன்னதாக கனியாமூரில், தனியார் பள்ளி மீது நடத்தப்பட்ட தாக்குதலில், மாணவியின் தாய் மற்றும் திராவிட மணி ஆகியோர்தான் காரணம் என்று மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

இதற்கு காவல்துறை பதிலளிக்கையில், இந்த சம்பவம் தொடர்பாக 519 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 166 பேரின் செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஆய்வக சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே உயிரிழந்த மாணவியின் தாயார் செல்வியிடம் இதுவரை விசாரணை நடத்தவில்லை என மனுதாரர் புகார்மனுவில் தெரிவித்திருந்தார்.

பின்னர் நடந்த வழக்கு விசாரணையில், "கனியாமூர் பள்ளி மாணவி மரணத்தை தொடர்ந்து நடந்த கலவரம் தொடர்பாக இரண்டு ஆண்டுகள் ஆகியும் ஏன் இன்னும் மாணவியின் தாயாரிடம் விசாரணை நடத்தவில்லை.? நல்ல நாளுக்காக காத்துக் கொண்டிருக்கிறீர்களா..? இருவருக்கும் எதிராக ஆதாரம் இருந்தால் குற்றவாளிகளாக சேர்ப்பீர்களா..?" என காவல்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பி உள்ளது.

இதற்கு பதிலளித்த காவல்துறை, ஆதாரம் இருந்தால் இருவரும் குற்றவாளிகளாக சேர்க்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் தற்போதைய நிலை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, விசாரணை ஜூலை 3ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# ஆசை வார்த்தை கூறி இளம்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்த ராணுவ வீரர்



மதுரை, ஜூன் 28

உசிலம்பட்டி மகளிர் போலீஸ் நிலையத்தில் இந்த புகாரின் விசாரணைக்காக ராணுவ வீரர் ராமன் ஆஜரானார்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியை சேர்ந்தவர் ராமன் (வயது 26). இவர் இந்திய ராணுவத்தில் ஜம்மு காஷ்மீரில் பணியாற்றி வருவதாக கூறப்படுகிறது. இவர் உசிலம்பட்டி பகுதியை சேர்ந்த பட்டதாரி இளம் பெண் ஒருவருடன் நட்பாக பழகி வந்தாராம். பின்னர் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் அந்த பெண் கர்ப்பமானார்.

இதற்கிடையில் ராமன் அந்த பெண்ணிடம் கருவில் இருந்த குழந்தையைகலைத்துவிட்டால் திருமணம் செய்து கொள்கிறேன் என்று மிரட்டி கருவில் இருந்த குழந்தையை கலைக்க செய்துவிட்டு பின்னர் திருமணம் செய்து கொள்ள மறுத்துள்ளார்.

இதில்அதிர்ச்சிஅடைந்த இளம்பெண் உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கடந்த ஜனவரி மாதம் புகார் அளித்துள்ளார். இந்த புகாரின்அடிப்படையில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு ஆஜராக ராமனுக்கு போலீசார் சம்மன் அனுப்பினர். இதன் அடிப்படையில் உசிலம்பட்டி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் விசாரணைக்காக ராணுவ வீரர் ராமன் ஆஜரானார்.

பின்னர் இந்த வழக்கு தொடர்பாக ராமனை போலீசார் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அழைத்துசென்றனர். அப்போதுபோலீஸ் நிலையம் முன்பு ராணுவ வீரரின் உறவினர்கள் மற்றும் இளம்பெண்ணின் உறவினர்கள் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டனர். பின்னர் அங்கு பணியில் இருந்த போலீசார் இரு தரப்பினரையும் சமரசப்படுத்தினர். போலீஸ் நிலையம் முன்பு இரு தரப்பினர் தாக்கிக் கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பள்ளிக்கு செல்லாமல் இருந்ததை கண்டித்த தாய்: பிளஸ்2 மாணவன் தூக்கிட்டு தற்கொலை

கோவை, ஜூன் 29

கோவை மலுமிச்சம்பட்டி ஒக்கிலிபாளையம் சாலையை சேர்ந்தவர் பழனிமுருகன். இவர்பெயிண்டிங் வேலை செய்து வருகிறார். இவருடைய மூத்த மகன் முத்துகிருஷ்ணன் (வயது 17). இவன் மலுமிச்சம்பட்டியில் உள்ள அரசு பள்ளியில் 12ம் வகுப்பு படித்து வந்தான். முத்துகிருஷ்ணன் அடிக்கடி பள்ளிக்கு செல்லாமல், வீட்டிலேயே இருந்து வந்ததாக தெரிகிறது. இதனை அவருடைய தாயார் கண்டித்ததுடன், பள்ளிக்கு செல்லுமாறு அறிவுரை கூறியுள்ளார். இதனால் மாணவன் மனமுடைந்து காணப்பட்டான்.

சம்பவத்தன்று பழனிமுருகன்மற்றும்அவருடைய மனைவி வழக்கம் போல் வேலைக்கு சென்றனர். இளைய மகளும் பள்ளிக்கு சென்றுவிட்டார். இதனால் முத்துகிருஷ்ணன் மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளான். மாலைஇளைய மகள் பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்தபோது, முத்துகிருஷ்ணன்வீட்டில்உள்ள அறையில் தூக்கில் பிணமாக தொங்கி கொண்டிருந்தார். இதுகுறித்து தகவல் அறிந்து வந்த செட்டிப்பாளையம் போலீசார், மாணவனின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

பள்ளிக்கு செல்லுமாறு பெற்றோர் கண்டித்ததால் மாணவன் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. இந்த சம்பவம் குறித்து போலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காதல் விவகாரத்தில் தலை துண்டித்து வாலிபர் படுகொலை



மதுரை, ஜூன் 29

மதுரை மாவட்டம் டி. கல்லுப்பட்டி அருகே உள்ள வேளாம்பூர் பகுதியில் கண்மாய் ஒன்று உள்ளது. அதன் அருகே உள்ள முட்புதருக்குள் வாலிபர் ஒருவரின் துண்டிக்கப்பட்ட தலையும், அங்கிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் உடலும் தனித்தனியாக கிடந்தன. நிர்வாண நிலையில் அந்த ஆண் பிணம் கிடந்தது.

இதை அந்த பகுதியில் சென்றவர்கள் கவனித்து, கிராம நிர்வாக அலுவலருக்கு தெரிவித்தனர். பின்னர் போலீசாருக்கும் இது பற்றி தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். உடலையும், தலையையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

கொடூரமாக கொலை செய்யப்பட்ட இந்த வாலிபர் யார்? என்பதை அறிய தீவிர விசாரணையை போலீசார் தொடங்கினர். தடயவியல் நிபுணர்கள் தடயங்களை பதிவு செய்தனர். மோப்ப நாய், வரவழைக்கப்பட்டும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அர்விந்த், சம்பவ இடத்தை பார்வையிட்டார்.

இதுதொடர்பாக வி.சத்திரப்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். சற்று நேரத்தில் இந்த சம்பவத்தில் துப்பு துலங்கியது. கொலை செய்யப்பட்டு கிடந்தவாலிபர்விருதுநகர் மாவட்டம் கோவிலாங்குளம் பகுதியை சேர்ந்த மாரிமுத்து என்பவருடைய மகன் அழகேந்திரன் (வயது 21) என்று தெரியவந்தது. பட்டதாரியான இவர், வேலை தேடி வந்துள்ளார்.

கொலைக்கான பின்னணி குறித்து போலீசார் கூறியதாவது:

அழகேந்திரன் வேறு சமுதாயத்தை சேர்ந்த பெண்ணை காதலித்து வந்துள்ளார். இது அந்த பெண்ணின் உறவினரான டி.கல்லுப்பட்டி அருகே உள்ள வெங்கடாசலபுரத்தை சேர்ந்த போராளி என்ற பிரபாகரன் (27) என்பவருக்கு தெரியவந்தது. அவர் அழகேந்திரனை கண்டித்து உள்ளார்.

இதனால் அவர்கள் இருவருக்கும் பிரச்சினை இருந்து வந்துள்ளது. சம்பவத்தன்று அழகேந்திரனிடம் தனியாக பேச வேண்டும் என வெங்கடாசலபுரம் பகுதிக்குபிரபாகரன்அழைத்து சென்றுள்ளார். அங்கு பிரபாகரனுக்கும் அழகேந்திரனுக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதில் ஆத்திரம் அடைந்த பிரபாகரன், தான் மறைத்து வைத்திருந்த நீண்ட வாளால் அழகேந்திரனின் தலையை துண்டித்து கொடூரமாக கொலை செய்துள்ளார். பின்னர் தலையையும், உடலையும் வேறுவேறாக அங்குள்ள புதரில் போட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர். .

இதற்கிடையில் தனது மகனை ஆணவக்கொலை செய்து விட்டதாக கூறி அழகேந்திரனின் தாயார் மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் தமிழ்புலிகள் அமைப்பினர் மதுரைகலெக்டர் அலுவலக வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். போலீசார் விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். அப்போது, கலெக்டரை நேரில் சந்தித்து தங்கள் மனுவை அளிக்கும் வரை போராட்டம் நீடிக்கும் என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே தலைமறைவாக இருந்த பிரபாகரனை போலீசார் கைது செய்து, அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்தபடுகொலை சம்பவம் மதுரை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இன்ஸ்டாகிராம் பழக்கம்: தன்னையே ஆபாசமாக வீடியோ எடுத்து வாலிபருக்கு அனுப்பிய பிளஸ்1 மாணவி



திருப்பூர், ஜூன் 29

கரூர் மாவட்டம் விஜயமங்கலம் அருகே உள்ள வஞ்சியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் விக்னேஷ் (வயது 27). இவருக்கும், தாராபுரம் அருகே உள்ள மூலனூர் பகுதியை சேர்ந்த 16 வயதுடைய பிளஸ்1 மாணவிக்கும் இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. முதலில் இருவரும் நட்பாக பழகியதால் அவர்களது புகைப்படம் மற்றும் வீடியோவை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பரிமாறி வந்துள்ளனர். இந்த பழக்கம் நாளடைவில் அவர்களுக்குள் காதலாக மாறியது.

இதற்கிடையில் மாணவியை காதல் வலையில் சிக்க வைத்த விக்னேஷ், தனது காம வலையில் வீழ்த்த, உனது ஆபாச வீடியோவை எடுத்து அனுப்புமாறு சிறுமியிடம் பேசி மயக்கி உள்ளார். வீடியோவை பார்த்த உடனே டெலிட் செய்து விடுவேன் என கூறவே, சிறுமியும் தன்னை ஆபாசமாக வீடியோ எடுத்து இன்ஸ்டாகிராம் மூலம் விக்னேசுக்கு அனுப்பியுள்ளார். அதை போனின் ஸ்கிரீன்ரெக்கார்டர்மூலம் விக்னேஷ் பதிவு செய்து வைத்துக்கொண்டதாக கூறப்படுகிறது.

அதன்பின்னர் சில நாள் கழித்து தனியாக ஒரு இடத்திற்கு வர வேண்டும், இல்லையென்றால் உனதுஆபாசவீடியோவை சமூக வலைதளங்களில் பரப்பி விடுவேன் என மிரட்டியதுடன், தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறும் வற்புறுத்தியுள்ளார். இதனால் பயந்துபோன சிறுமி தனது தாய் மற்றும் தந்தையிடம் தெரிவித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த சிறுமியின் பெற்றோர் தாராபுரம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர். அதன் பேரில் போலீசார் விக்னேசை பிடித்து வந்து விசாரித்தனர். அப்போது அவர் இதுபோல் பலரிடம் இன்ஸ்டாகிராம் மூலம் தொடர்பில் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து விக்னேசை கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.22 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்



சென்னை, ஜூன் 29

நைஜீரியா நாட்டில் இருந்து சென்னை பன்னாட்டு விமான நிலையத்திற்கு கடத்தி வரப்பட்ட ரூ.22 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தோகாவில் இருந்து சென்னை வந்த பயணிகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது கென்யாவில் இருந்து வந்த இளம் பெண், கால்களில் அணிந்திருந்த ஷூக்களில் மறைத்து போதைப்பொருளை கடத்தி வந்தது தெரியவந்தது. இதையடுத்து அப்பெண்ணிடம் இருந்து 2.2 கிலோ கொக்கென் என்ற போதைப்பொருளை கைப்பற்றினர்.

மேலும் அப்பெண்ணை கைது செய்த அதிகாரிகள், சென்னையில் யாரிடம் கொடுப்பதற்காக போதைப்பொருளை எடுத்து வந்தார்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தொடரும் மனிதநேயம்.. அரசு பேருந்தில் கர்ப்பிணிக்கு திடீர் பிரசவ வலி அடுத்து நடந்த சம்பவம்..?



கடலூர், ஜூன் 29

திட்டக்குடியில் இருந்து கொத்தனூர்வழியாக அரசு பேருந்தில் கர்ப்பிணி பெண் ஒருவர் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அந்த பெண்ணுக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டது.

உடனடியாக செயல்பட்ட ஓட்டுனர்பேருந்தை சாலையின்ஓரமாகநிறுத்தி மூதாட்டி ஒருவரை பிரசவம் பார்க்க சொன்னார். அப்போது அந்த பேருந்திலேயே அப்பெண்ணுக்கு சுகப்பிரசவத்தில் அழகான ஆண் குழந்தை பிறந்தது.

சாமர்த்தியமாக செயல்பட்ட ஓட்டுனர், நடத்துனர் மற்றும் மூதாட்டிக்கு பல்வேறு தரப்பில் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகிறது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

29.6.2024

# ஓ.டி.டி யில் வெளியாகும் விஜய் சேதுபதியின் "மகாராஜா" திரைப்படம்



விஜய் சேதுபதி நடிப்பில் திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வரும் திரைப்படம் மகாராஜா. இத்திரைப்படம் விஜய் சேதுபதியின் 50வது படமாகும். குரங்கு பொம்மை படத்தை இயக்கிய நிதிலன் சாமிநாதன் இத்திரைப்படத்தை இயக்கி இருக்கிறார். சுதன் சுந்தரம், ஜெகதீஷ் பழனிசாமி ஆகியோர் இணைந்து இப்படத்தை தயாரித்து இருக்கின்றனர். அஜனீஷ் லோக்நாத் இப்படத்திற்கு இசை அமைத்துள்ளார்.

படத்தில், விஜய் சேதுபதியுடன் பாரதிராஜா, அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், அபிராமி, நட்டி நட்ராஜ் உள்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இத்திரைப்படம் கடந்த ஜூன் 14ம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களின் மத்தியில் ஏகபோக வரவேற்பு பெற்றது.

இந்நிலையில், மகாராஜா படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. இப்படத்தை பிரபல ஓ.டி.டி தளமான நெட்பிக்ஸ் வாங்கி உள்ளது. எனவே, இப்படம் நெட்பிக்ஸ் தளத்தில் அடுத்த மாதம் 2ம் வாரத்தில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை படக்குழு விரைவில் அறிவிக்கும்.

# நடிகர் விஜய் ஆண்டனி நடித்துள்ள 'ஹிட்லர்' படத்தின் வெளியீடு எப்போது ? வெளியான தகவல்




இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் ஆண்டனி இறுதியாக நடித்த 'ரோமியோ' திரைப்படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றது. தற்போது, 'படைவீரன்', 'வானம் கொட்டட்டும்' உள்ளிட்ட படங்களை இயக்கிய தனா இயக்கத்தில் 'ஹிட்லர்' என்கிற புதிய படத்தில் விஜய் ஆண்டனி நடித்துள்ளார்.

இதில் ரியா சுமன் நாயகியாக நடித்துள்ளார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகர் சரண்ராஜ் இப்படத்தில் ஒரு முக்கியமான பாத்திரத்தில் நடித்துள்ளார். படத்தின் படப்பிடிப்பு முழுமையாக முடிந்த நிலையில், தற்போது இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

செந்தூர் பிலிம் இண்டர்நேஷனல் தயாரிக்கும் இப்படத்தில் கௌதம் வாசுதேவ் மேனன் உள்ளிட்ட முன்னணி நடிகர்கள் நடித்துள்ளனர். இப்படத்தின் முதல் பார்வை போஸ்டர் முன்னதாக வெளியானது. இந்த நிலையில், இப்படம் ஆகஸ்ட் வெளியீடாக திரைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# "அண்ணாமலை" படம் 32 ஆண்டு நிறைவு குறித்து குஷ்பு டுவிட்

தமிழ்சினிமாவில்மாபெரும்வெற்றிபெற்ற"அண்ணாமலை"திரைப்படம்வெளியாகி32ஆண்டுகள்நிறைவடைந்துள்ள நிலையில், நடிகை குஷ்பு நெகிழ்ச்சியுடன் தன் டுவிட்டர் பக்கத்தில் இது குறித்து பதிவிட்டுள்ளார்.

சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் 1992ம் ஆண்டு வெளிவந்த படம் அண்ணாமலை. இத்திரைப்படத்தில் ரஜினிகாந்த், குஷ்பூ, மனோரமா, ஜனகராஜ் எனப் பலரும் நடித்துள்ளனர். சிறுவயதில் இருந்தே நண்பர்களாக இருக்கும் ஏழை பால் வியாபாரி அண்ணாமலை மற்றும் பணக்கார ஹோட்டல் வியாபாரி அசோக், இருவருக்கும் இடையே பிளவை ஏற்படுத்த முயலும் அசோக்கின் தந்தை எதிர்க்கும் நட்பைச் சுற்றியே படக் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தது. 1992 காலங்கட்டத்தில் மாபெரும் வெற்றி பெற்றது அண்ணாமலை படம். படம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பையும் பெற்றது. அதுமட்டுமில்லாமல் 175 நாட்கள் ஓடி வெற்றி விழாவும் கொண்டாடப்பட்டது. இந்நிலையில் அண்ணாமலை திரைப்படம் வெளியாகி இன்றுடன் 32 ஆண்டுகள் ஆகிவிட்டது. இது குறித்து சமூக வலைதளங்களில் ரஜினியின் அண்ணாமலை படம் குறித்து பேசப்பட்டு வருகிறது. அதில் இடம் பெற்றுள்ள "மலைடா அண்ணாமலை" "அசோக் உன் காலெண்டர்ல குறிச்சு வைச்சுக்கோ" போன்ற வசனங்களும் அனைவராலும் பகிரப்பட்டு வருகிறது. அண்ணாமலை படம் 32 ஆண்டு நிறைவடைந்ததையடுத்து தனது எக்ஸ்தளத்தில் அண்ணாமலை பட போஸ்டரை பகிர்ந்துள்ளார் குஷ்பூ. அதில் கூறியிருப்பதாவது. உலக சூப்பர் ஸ்டாரின் நடிப்பில் வெளியாகிய அண்ணாமலை 2761992ல் 56 அரங்கில் 50 நாள், 22 அரங்கில் 100நாள், 15 அரங்கில் 120 நாள், முதன் முறையாக 9 நாடுகளில் 25 நாட்கள் கடந்து வெள்ளிவிழா கொண்டாடி அன்றைய ஆளுங்கட்சியின் தடைகளை வென்று 61 வருட தமிழ் சினிமா வரலாற்றில்அதுவரையிருந்தவசூல்சாதனைகளைமுறியடித்துபுதியவசூல்சாதனைபடைத்த"அண்ணாமலை" இன்று 32 ஆண்டு நிறைவு அடைந்துள்ளது என்று கூறியுள்ளார்.



# அஜித் நடிக்கும் குட் பேட் அக்லி படத்தின் 2வது லுக் வெளியானது




ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் அஜித் குமார் தனது 63வது படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்துக்கு 'குட் பேட் அக்லி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இத்திரைப்படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலாகியது. 'குட் பேட் அக்லி' படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு ஐதராபாத்தில் நடைபெற்று வருகிறது. அடுத்ததாக படக்குழு, இரண்டாம் கட்ட படப்பிடிப்புக்கு தயாராகி வருகிறது. அதன்படி இப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு ரஷியாவில் விரைவில் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்துக்கு தேவிஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். இந்த சூழலில் 'குட் பேட் அக்லி' படத்தின் புதிய அப்டேட் இன்று மாலை 6.40 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு அறிவித்திருந்தது.

இதன்படி இன்று மாலை அஜித்குமாரின் 'குட் பேட் அக்லி' படத்தின் 2வது லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. இதனை அவரது ரசிகர்கள் சமூக வலைதளங்களில் டிரெண்ட் செய்து வருகின்றனர்.

# இன்ஸ்டாகிராமில் பிரியங்கா சோப்ரா பகிர்ந்த புகைப்படங்கள் வைரல்



தமிழில் கடந்த 2002ம் ஆண்டு விஜய் நடிப்பில் வெளியான 'தமிழன்' திரைப்படம் மூலம் நடிகையாக அறிமுகமானார் பிரியங்கா சோப்ரா. அதனைத்தொடர்ந்து அவருக்கு பட வாய்ப்புகள் அதிகமாக வரத்தொடங்கின. பின்னர் பாலிவுட் நடிகையாக உயர்ந்தார். இவர் 2018ம் ஆண்டு பாடகர் நிக் ஜோனாசை திருமணம் செய்துகொண்டார். இந்தத் தம்பதிக்கு ஒரு மகள் உள்ளார். இந்த நிலையில், நடிகை பிரியங்கா சோப்ரா தனது அடுத்த ஹாலிவுட் படமான 'தி பிளப்' என்ற படத்திற்காக ஆஸ்திரேலியா சென்றுள்ளார். அங்கு தனது குடும்பத்துடன் நேரத்தை செலவிட்டுள்ளார். மேலும் தற்போது நடித்து கொண்டிருக்கும் ஆக்ஷன் படத்தில் பணிபுரிந்த அனுபவ காட்சியை கணவர் நிக் ஜோனாசுடன் பகிர்ந்து கொண்டார். "தி பிளப்" படப்பிடிப்பில் ஏற்பட்ட காயத்தின் வீடியோ, தனது குடும்பத்தினருடன் எடுத்துக் கொண்ட மனதைக் கவரும் புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். பிரியங்கா தனது காலில் பூண்டு பற்களை தேய்க்கும் வீடியோவையும் பகிர்ந்துள்ளார். இந்த அனைத்து புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தன. பூண்டு பற்களை காலில் தேய்ப்பதை ரசிகர் ஒருவர் இது என்ன செய்யும்? என்று கேட்டார். அதற்கு பிரியங்கா, இது வீக்கம் மற்றும் காய்ச்சலுக்கு உதவுகிறது என்று பதிலளித்துள்ளார்.

# நடிகர் வெங்கல் ராவ் சிகிச்சைக்கு ரூ.1 லட்சம் அளித்து பாலா உதவி



உடல்நிலை சரியில்லாமல் கஷ்டப்படும் காமெடி நடிகர் வெங்கல் ராவுக்கு, நடிகர் சிம்புவைத் தொடர்ந்து "கலக்கப்போது யாரு" பாலாவும் ரூ.1 லட்சம் கொடுத்து அவருக்கு உதவியுள்ளார்.

காமெடி நடிகர் வெங்கல் ராவ் உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தனக்கு சினிமா கலைஞர்கள் நிதியுதவி செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து வீடியோ ஒன்றை வெளியிட்டார்.

இந்த வீடியோ இணையத்தில் வைரல் ஆன நிலையில் நடிகர் சிம்பு 2 லட்சம் ரூபாய், ஐஸ்வர்யா ராஜேஷ் 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி செய்ததாகவும் மேலும் சிலர் நிதி உதவி செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில்நடிகர்பாலாஇந்தவீடியோவை பார்த்ததும் உடனடியாக அவருக்கு ஒரு லட்ச ரூபாய்நிதிஉதவிசெய்ததாகவீடியோஒன்றைதனதுஇன்ஸ்டாகிராம்பக்கத்தில்வெளியிட்டுள்ளார்.

வெங்கல்ராவ் கூகுள்பே நம்பரைதனது இன்ஸ்டாகிராமில் பகிர்ந்து உங்களால் முடிந்த உதவியை செய்யுங்கள் என்றும் அவர் வேண்டுகோள் எடுத்துள்ளார். மேலும் வெங்கல் ராவ் அவர்கள் மறுபடியும் முழுமையாக குணமடைந்து அவர் சினிமாவில் நடிக்க வேண்டும் என்றும் அவரை திரையில் பார்க்க மிகவும் ஆர்வமாக இருக்கிறேன் என்றும் அந்த வீடியோவில் அவர் தெரிவித்துள்ளார்.

பாலாவின் கோரிக்கையை ஏற்று அவருடைய பாலோயர்கள் மற்றும் அந்த வீடியோவை பார்த்தவர்கள் வெங்கல் ராவுக்கு தங்களால் முடிந்த பணத்தை அனுப்பி வருவதாக கமெண்ட் பகுதியில் பதிவு செய்து வருகின்றனர்.

# டி20 உலகக்கோப்பை வரலாற்றில் ஆஸ்திரேலியாவின் மாபெரும் சாதனையை சமன் செய்த தென் ஆப்பிரிக்கா



நடப்பு டி20 உலகக்கோப்பை தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானை வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறி வரலாறு படைத்துள்ளது.

தென் ஆப்பிரிக்கா அணி இதுவரை விளையாடிய 8 போட்டிகளிலும் ( லீக், சூப்பர் 8 மற்றும் அரையிறுதி சுற்றுகள்) வெற்றி பெற்று, தோல்வியே சந்திக்காமல் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது. இதன் மூலம் டி20 உலகக்கோப்பை வரலாற்றில் தோல்வியே சந்திக்காமல் தொடர்ந்து அதிக வெற்றிகள் பெற்ற அணிகளின் மாபெரும் சாதனை பட்டியலில் ஆஸ்திரேலியாவை சமன் செய்துள்ளது.

அந்த பட்டியல்: 1. தென் ஆப்பிரிகா / ஆஸ்திரேலியா 8 வெற்றிகள் 2. இங்கிலாந்து / இந்தியா 7 வெற்றிகள்

டி20 உலகக்கோப்பை வரலாற்றில் முதன் முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறி உள்ள தென் ஆப்பிரிக்கா அதிலும் வெற்றி பெற்றால் ஆஸ்திரேலியாவை முந்தி முதலிடம் பிடிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை தவிர மற்ற அணிகளுக்கு ஐ.சி.சி. அநியாயம் செய்துள்ளது மைக்கேல் வாகன் விமர்சனம்




இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள 9வது டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டிக்கு ஆப்கானிஸ்தானை வீழ்த்தி முதல் அணியாக தென் ஆப்பிரிக்கா தகுதி பெற்றுள்ளது. மற்றொரு அணி எது என்பதை தீர்மானிக்கும் மற்றொரு ஆட்டத்தில் இந்தியா இங்கிலாந்து அணிகள் கயானாநகரில்பலப்பரீட்சைநடத்தஉள்ளன.

அதன்படி இன்று காலை டிரினிடாட் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் 56 ரன்களில் சுருண்டது. இதனையடுத்து இலக்கை நோக்கி களமிறங்கிய தென் ஆப்பிரிக்கா 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

ஆனால் இந்த போட்டி கயானா நகரில் நடைபெற்றிருக்க வேண்டும் என்று மைக்கேல் வாகன் விமர்சித்துள்ளார். அத்துடன் இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதும் 2வது அரையிறுதி டிரினிடாட் நகரில் நடைபெற்றிருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். ஆனால் இதை தட்டிக் கேட்க வேண்டிய ஐசிசி'யே மொத்த உலகக் கோப்பையையும் இந்தியாவுக்கு சாதகமாக நடத்தி மற்ற அணிகளுக்கு அநியாயத்தை செய்துள்ளதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

முன்னதாக அதிகாலை 6 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா விளையாடினால் அதை பெரும்பாலான இந்திய ரசிகர்கள் பார்க்க மாட்டார்கள்.அதனால்இந்தியாஅரையிறுதிக்குதகுதிபெற்றால்அப்போட்டி கயானாவில் தான் நடைபெறும் என்று ஐசிசி அறிவித்திருந்தது.

இது குறித்து மைக்கேல் வாகன், தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளது பின்வருமாறு. "இந்த அரையிறுதி போட்டி கண்டிப்பாக கயானாவில் நடந்திருக்க வேண்டும். ஆனால் இந்த மொத்த தொடருமே இந்தியாவை நோக்கி நடத்தப்படுவதால் அது மற்ற அணிகளுக்கு அநியாயத்தை ஏற்படுத்தியுள்ளது" என்று பதிவிட்டுள்ளார்.

# களத்தில் கோபத்தை வெளிப்படுத்திய ரஷீத்... தண்டனையை அறிவித்த ஐ.சி.சி.. என்ன நடந்தது..?




விறுவிறுப்பாக நடைபெற்று வரும் டி20 உலகக்கோப்பை தொடர் வரும் 29ம் தேதியுடன் முடிவடைய உள்ளது. இதன் இறுதிப்போட்டிக்கு முதல் அணியாக ஆப்கானிஸ்தானை வீழ்த்தி தென் ஆப்பிரிக்கா தகுதி பெற்றுள்ளது. மற்றொரு அணி எது என்பதை தீர்மானிக்கும் ஆட்டத்தில் இந்தியா இங்கிலாந்து பலப்பரீட்சை நடத்த உள்ளன.

முன்னதாக இந்த தொடரில் நடைபெற்ற சூப்பர் 8 சுற்றின் கடைசி ஆட்டத்தில் வங்காளதேசத்தை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அரையிறுதிக்கு முன்னேறி வரலாறு படைத்தது. ஆப்கானிஸ்தான் அந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றதால் ஆஸ்திரேலியா இந்த தொடரிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இத்தகைய பரபரப்பான சூழலில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் முதலில் பேட்டிங் செய்தது. அப்போது 20வது ஓவரை சந்தித்த ரஷீத் கான் 2 ரன்கள் எடுக்க முயற்சித்தார். ஆனால் எதிர்ப்புறம் கொஞ்சம் மெதுவாக ஓடிய மற்றொரு ஆப்கானிஸ்தான் வீரர் கரீம் ஜனத் 2வது ரன்னை வேண்டாம் என்று சொல்லி விட்டார். அதனால் கோபமடைந்த ரஷீத் கான் அவரை நோக்கி தனது கையிலிருந்த பேட்டை தூக்கி எறிந்தார். நல்லவேளையாக பேட் ஜனத் மேல் படவில்லை. இருப்பினும் "பேட், பந்து போன்ற உபகரணத்தை பயன்படுத்தி களத்தில் இருக்கும் ஒரு வீரருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் ரஷீத்கான் நடந்து கொண்டார்" என்ற 2.9 விதிமுறையை மீறியதற்காக ஒரு கருப்பு புள்ளியை ஐ.சி.சி தண்டனையாக அறிவித்துள்ளது.


# ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு பரிசுத் தொகை அதிகரிப்பு

33வது ஒலிம்பிக் திருவிழா பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஜூலை 26ம் தேதி தொடங்குகிறது. இதில் இந்தியா சார்பில் 102 வீரர்வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள். கொரோனாவால் ஒரு ஆண்டு தள்ளிவைக்கப்பட்டு 2021ம் ஆண்டு டோக்கியோவில் நடந்த கடந்த ஒலிம்பிக்கில் இந்தியா ஒரு தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என்று 7 பதக்கம் வென்றது. இந்த ஒலிம்பிக்கில் இரட்டை இலக்கத்தில் பதக்கம் வெல்வதை குறிவைத்து இந்திய அணி ஆயத்தமாகி வருகிறது.

ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊக்கத் தொகையை அதிகரிக்க இந்திய ஒலிம்பிக் சங்கம் முடிவு செய்துள்ளது. இதன்படி பாரீஸ் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ,1 கோடியும், வெள்ளிப்பதக்கம் பெறுபவர்களுக்கு ரூ,75 லட்சமும், வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றுபவர்களுக்கு ரூ,50 லட்சமும் வழங்கப்படுகிறது.கடந்தமுறைமுதல்3இடங்களை பிடித்தவர்களுக்கு முறையே ரூ,75 லட்சம், ரூ,40 லட்சம், ரூ,25 லட்சம் வழங்கப்பட்டது.



ஆக்கி போட்டியில் இந்திய அணி தங்கப்பதக்கத்தை உச்சிமுகர்ந்தால் ரூ,2 கோடியும், வெள்ளிப்பதக்கம் வென்றால் ரூ,1 கோடியும், வெண்கலப்பதக்கம் பெற்றால் ரூ,75 லட்சமும் வழங்கப்பட இருக்கிறது. அத்துடன்வீரர்களுக்குதினசரி அலவன்சாக ரூ,4,200 அளிக்கப்பட இருக்கிறது.



பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்

விளக்கம்:
கேட்டவர் பலரும் வெறுக்கும் படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்றவன், எல்லாராலும் இகழப்படுவான்

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.